


பெரம்பலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர், போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர், குன்னம் வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் சக்திவேலிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். அப்போது பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி குன்னம் தொகுதி மாவட்டச் செயலாளர் அன்பானந்தன், தமிழக முஸ்லீம் முன்னேற்றக் கழகம் மாவட்டச் செயலாளர் முகம்மது இலியாஸ் ஆகியோர் உடனிருந்தனர்.



நாமக்கல் கிழக்கு மாவட்டம் நாமக்கல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நாமக்கல் ஒன்றியம், காதப்பள்ளி, மோகனூர் ஒன்றியம் உள்ளிட்ட பகுதிகளில் கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின நல்லாசியுடன் கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துக்களுடன் நாமக்கல் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் போட்டியிடும் தி.மு.க. வெற்றி வேட்பாளர் கே.பி.ராணிக்கு ஆதரவாக நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்இராஜேஸ்குமார் வாக்கு சேகரித்தார். இந்நிகழ்ச்சியின் போது நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், ஒன்றிய கழக செயலாளர்கள் விகே.பழனிவேல், பெ.நவலடி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் திருமயம் சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் சட்டமன்றத் தொகுதி திருமயம் தெற்கு ஒன்றியத்தில், தேர்தல் பரப்புரை செய்தார். நிகழ்வில் திருமயம் தெற்கு ஒன்றிய செயலாளர் அழகு சிதம்பரம், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் ராம.சுப்புராம், ஆர்.எம்.கருப்பையா மற்றும் மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி நிர்வாகிகள் உள்ளனர்.

## பிரதமர் மோடி எத்தனை முறை சுற்றிச் சுற்றி வந்தாலும்

# தமிழ்நாட்டில் பா.ஜ.க. கூட்டணி வெற்றி பெற முடியாது!

## மதுரையில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பேட்டி!


மதுரை, ஏப். 9 -

மதுரையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் திரைப்பட பின்னணி பாடகர் டி.எம்.சௌந்தர ராஜன் சிலை முன் அவரது பாடல்களைப் பாடி ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வாக்கு சேகரித்தார்.

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பழைய திரைப்படப் பாடல்கள் குறிப்பாக டி.எம். சௌந்தரராஜன் பாடல்களுக்கு தீவிர ரசிகர்.

சமீபத்தில் சென்னை வந்திருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பேபியை சந்தித்துப் பேசிய பின் வைகோ அளித்த பேட்டியில்,

'இருவரும் பழைய திரைப்படப் பாடல்களுக்கு ரசிகர்கள். பாவமன்னிப்பு, பாலும் பழமும் பாடல்களைக் கேட்டோம்' என்று கூறினார்.



இந்நிலையில், 'மதுரை தெற்கு தொகுதி ம.தி.மு.க. வேட்பாளர் பூமிநாதன் மதுரை முனிச்சாலை பகுதியில் உள்ள மாநகராட்சி தெற்கு மண்டல அலுவலகத்தில் வைகோ முன்னிலையில் நேற்று முன்தினம் வேட்புமனு தாக்கல் செய்தார்.

பின்னர், அப்பகுதியில் உள்ள திரைப்பட பின்னணி பாடகர் டி.எம்.சௌந்தரராஜன் சிலை முன் அவரது பாடல்களை பாடி வைகோ வாக்கு சேகரித்தார்.

'உள்ளம் உருகுதய்யா..', 'கற்பனை என்றாலும்...' ஆகிய பாடல்களை பாடினார். கூட்டத்தினர் கைதட்டி வரவேற்றனர்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி 200 இடங்களுக்கு மேல் உறுதியாக வெற்றி பெறும்.

மதுரை தெற்கு தொகுதியில் பூமிநாதன் 30 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவார்.

சாதி, மதம், கட்சி எல்லைகளை கடந்து, 5 ஆண்டுகளாக தொகுதி மக்கள், நாடி வந்த அனைவருக்கும் பிரதிபலன் எதிர்பாராமல் பணிபுரிந்துள்ளார். டி.எம்.சௌந்தரராஜன் சிலை அமைத்தது உட்பட பல்வேறு திட்டங்களை கொண்டு வந்துள்ளார்.

பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும், பிற மத்திய அமைச்சர்களும் தமிழ்நாட்டுக்குள் எத்தனை முறை வந்தாலும், எத்தனை தொகுதிகளில் சுற்றி வந்தாலும் வெற்றிபெற முடியாது.

பிரதமர் விமானத்தில் வருகிறார். ரோடு ஷோ செல்கிறார். அப்போது அவர் வாகனத்தை ஏன் சோதனை யிடவில்லை. எல்லோருக்கும் ஒரே அளவு கோல் இருக்க வேண்டும். பிரதமர், உள்துறை அமைச்சர், பிற மத்திய அமைச்சர்களின் வாகனங்களையும் சோதனையிட வேண்டும். அப்படி செய்தால் தேர்தல் ஆணையம் நடுநிலையுடன் செயல்படுவதாக மக்கள் நம்புவார்கள்.

இவ்வாறு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கூறினார்.

# முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு அரசு வேலையில் முன்னுரிமை!

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தேர்தல் அறிக்கை!

சென்னை, ஏப். 9 -

முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு அரசு வேலையில் முன்னுரிமை வழங்க அரசை வலியுறுத்துவது உள்ளிட்ட 71 வாக்குறுதிகள் அடங்கிய தேர்தல் அறிக்கையை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வெளியிட்டுள்ளது.

சட்டப்பேரவைத் தேர்தலுக்கான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தல் அறிக்கையை அக்கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் தி.நகரில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று வெளியிட்டார்.

"மதச்சார்பின்மை மாநில உரிமைகளைப் பாதுகாப்போம்; உழைக்கும் மக்கள் குரலை உரத்து முழங்குவோம்" என்ற முழக்கத்துடன் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில், மாநில சுயாட்சி, தொழிலாளர் நலன் மற்றும் தமிழ் மொழி வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தேர்தல் அறிக்கையில் முக்கிய அம்சமாக, மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்கக் காலக்கெடு நிர்ணயித்தல், பல்கலைக்கழக வேந்தர் பதவியிலிருந்து ஆளுநரை நீக்குதல் மற்றும் அரசியல் கட்சிகள் கார்ப்பரேட் நன்கொடை பெறுவதைத் தடை செய்தல் போன்ற அதிரடி மாற்றங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன. தென்மாநிலங்களின் மக்களவைத் தொகுதிகள் எண்ணிக்கையை குறைக்கும் தொகுதி மறுவரையறைக்குக் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்துத் துறைகளிலும் குறைந்தபட்ச மாத ஊதியமாக ரூ.26 ஆயிரம், 100 நாள் வேலைத் திட்டக் கூலியை ரூ.700 ஆக உயர்த்தி 200 நாட்களாக விரிவாக்குதல் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு ரூ.5 ஆயிரம் ஓய்வூதியம் போன்றவற்றுக்கு தேர்தல் அறிக்கையில் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

வேளாண் விளைபொருட்களுக்கு உற்பத்தி செலவுடன் 50 சதவீதம் கூடுதல் விலை வழங்க ஒன்றிய அரசை வலியுறுத்தவும், கோயில் மற்றும் வக்பு நிலங்களில் வசிப்போருக்குப் பட்டா வழங்கவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தாது மணல், கல் மற்றும் கிரானைட் குவாரிகளை அரசாங்கமே ஏற்று நடத்துதல், கேரளாவைப் போல 'சேவை பெறும் உரிமைச் சட்டம்' கொண்டு வருதல், அனைத்துத் துறைகளிலும் தமிழை முழுமையான ஆட்சி மொழியாக்குதல் மற்றும் இந்தி திணிப்பை எதிர்த்தல் போன்றவை மார்க்சிஸ்ட் தேர்தல் அறிக்கையில் முக்கிய இடம்பிடித்துள்ளன. மேலும், சத்துணவு திட்டத்தில் அசைவ உணவுகள், முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு அரசு வேலையில் முன்னுரிமை மற்றும் புதிய ஆட்டோ வாங்க ரூ.1 லட்சம் மானியம் உள்ளிட்ட 71 வாக்குறுதிகள் இதில் இடம்பெற்றுள்ளன.

# கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி. முன்னிலையில்

# ராசிபுரத்தில் பட்டா பிரச்சினைக்கு தீர்வு காண உறுதி!

## மா.மதிவேந்தனை ஆதரித்து அந்தியூர் செல்வராஜ் எம்.பி. தீவிர பிரச்சாரம்!

நாமக்கல், ஏப். 9 –

ராசிபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் டாக்டர் மா.மதிவேந்தனுக்கு ஆதரவாக தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான அந்தியூர் செல்வராஜ் தீவிர தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு, பொதுமக்களின் நீண்ட நாள் வீட்டுமனை பட்டா கோரிக்கைகள் விரைவில் நிறைவேற்றப்படும் என உறுதியளித்தார்.

நாமக்கல் கிழக்கு மாவட்டம் ராசிபுரம் ஆர்.எம்.சி காலனி, வெண்ணந்தூர் பேரூர், அத்தனூர் பேரூர் ஆகிய இடங்களில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில் கலந்து கொண்ட அந்தியூர் செல்வராஜ், பொதுமக்களிடம் வாக்கு சேகரித்து, தி.மு.க. வேட்பாளர் மருத்துவர் மா.மதிவேந்தனுக்கு ஆதரவு திரட்டி னார்.

அப்போது அவர் பேசுகையில், ''இந்த பகுதியில் வசிக்கும் மக்கள் நீண்ட காலமாக வீட்டுமனை பட்டா கோரி வருகிறீர்கள். உங்களுக்காக செயல்பட திறமையான மாவட்டக் கழக செயலாளர் கிடைத்துள்ளார். இந்த தொகுதியில் மீண்டும் அமைச்சராக வருவதற்கான வாய்ப்பை கழகத் தலைவர் நம்பிக்கையுடன் மதிவேந்தனுக்கு வழங்கியுள்ளார்.

நீங்கள் மருத்துவர் மா.மதிவேந்தனை வெற்றி பெறச் செய்தால், நீண்ட நாள் நிலுவையில் உள்ள வீட்டுமனை பட்டா பிரச்சினைக்கு கண்டிப்பாக தீர்வு காணப்படும். உங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற வல்லமை பெற்றவர் அவர், என்றார்.

மேலும், தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் செயல்படுத்தப்பட்ட பல்வேறு நலத்திட்டங்களை சுட்டிக் காட்டிய அவர், ''மகளிர் உரிமைத் தொகை ரூ.1000 வழங்கப்பட்டு வருகிறது. மீண்டும் தி.மு.க. ஆட்சி அமைந்தால், அதனை ரூ.2000 ஆக உயர்த்த தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்கு பொதுமக்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது, என தெரிவித்தார்.

இந்த பிரச்சாரத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார், ராசிபுரம் தி.மு.க. நகர கழக செயலாளர் என்.ஆர்.சங்கர், நகர் மன்ற தலைவர் முனைவர் ஆர்.கவிதா, வெண்ணந்தூர் பேரூர் செயலாளர் ஆர்.எஸ்.எஸ்.ராஜேஷ், அத்தனூர் பேரூர் செயலாளர் கே.கண்ணன், தேமுதிக நகர கழக செயலாளர் இளையராஜா உள்ளிட்ட கூட்டணி கட்சியினர், வார்டு செயலாளர்கள், கவுன்சிலர்கள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# நெய்வேலியில் மாற்றுக்கட்சியினர் 500 பேர் கழகத்தில் இணைந்தனர்!

கடலூர், ஏப்.9-

கடலூர் மேற்கு மாவட்டம் நெய்வேலி சட்டமன்றத் தொகுதியின் மதச்சார்பற்ற கூட்டணிக் கட்சியின் தி.மு.க. வேட்பாளரும், தற்போதைய சட்ட மன்ற உறுப்பினருமான சபா.இராசேந்திரன் மாற்றுக்கட்சியினர் தி.மு.க.வில் இணைந்த மாபெரும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நெய்வேலி தொகுதிக்கு உட்பட்ட சிறுவத்தூர் ஊராட்சி ஒன்றிய கவுன்சிலரும், தமிழக வாழ்வுரிமை கட்சியின் ஒன்றியச் செயலாளருமான தேவராஜ் தலைமையில், திராவிட மாடல் நாயகர், கழகத் தலைவர் அவர்களின் கொள்கையை ஏற்று தேவநாதன், வெற்றிவேல், கோபி உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகளுடன் 500க்கும் மேற்பட்டோர் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தார்.

அதேபோல், சிறுத்தொண்ட மாதேவி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் கபடி பாண்டியன் மகன் சூர்யா தலைமையில் 50 பேர், வீரசிங்கன்குப்பம் பகுதியைச் சேர்ந்த தாமோதரன் தலைமையில் 50 பேர் என மொத்தம் 600 பேர் சபா. இராசேந்திரன் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் சபா.பாலமுருகன், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் அறிவழகன், பண்ருட்டி வடக்கு ஒன்றியச் செயலாளர் சந்தோஷ் குமார், அவைத் தலைவர் சிவக்குமார், துணைச் செயலாளர் செழியன், வழக்கறிஞர் ஜெகஜீவன் ராம், செம்மேடு அருள் ஜோதி, மாவட்டப் பிரதிநிதி பூபாலன், கிளைச் செயலாளர்கள் தங்கவேல், ராமதேவன், சிற்றரசு, இளைஞரணி துணை அமைப்பாளர்கள் முருகன், ராஜ்குமார், தொ.மு.ச. வெங்கடேசன், சி.பி.ஐ. ஞானசேகர், செல்வம், கிருஷ்ணமூர்த்தி, பாலாஜி உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலரும் உடனிருந்து வரவேற்றனர்.



திருவாரூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் பூண்டி.கே.கலைவாணன் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செய்தார். உடன் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி மற்றும் கழக நிர்வாகிகள் இருந்தனர்.



கரூர் சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் ஆசி எம். தியாகராஜன் கரூர் மாநகர மத்திய கிழக்கு பகுதி வஞ்சியம்மன்கோவில், பலிஜவார்நாயுடு தெரு பகுதிகளில், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜியின் சகோதரர் அசோக்குமாருடன் சென்று வாக்கு சேகரித்தார். பெண்கள் திரண்டு வந்து ஆரத்தி எடுத்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிப்போம் என உறுதி அளித்தனர்.